சிவமயம்.

காவேரியாற்றின்

வெள்ளச்சிந்து.

இரண்டாம் பாகம்

இஃது

தளவை தெ. ர. வெங்கட்ருமசெட்டியாரவர்கள் சீடன்

கொமாரபாளையம்

S. S. M. அர்த்தனாரிசாமி செட்டியாரால்

இயற்றியதை

...ன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1924 [அணா 1

O-,1MAS4,K
N24
449422

கணபதி துணை.

வெண்பா.

திருமருவுங் காவேரி சீற்றமுள நீரின்
பருவரலால் பாரிலுள்ளோர் வாட—இருமருங்கும்
தானெதிரு மூரழித்த தக்ககதை நான்புகல
ஆனைமுகத்தா னருள்.

பண்டார தண்டாயுதா என்ற மெட்டு.

பல்லவி.

வெள்ளம் நிறைந்துதய்யோ வீதிவீதியாக (வெ)

அனுபல்லவி.

துள்ளியலைகளாலேரி தூயபொருள்களை வாரி (வெ)

சரணம்.

1 கள்ளங்கபடில்லாத காவேரியாநதியில்
உள்ளம் நடுநடுங்கி ஊரைவிட்டனேகர்போக (வெ)

2 சூலையிருபத்தா ராந்தேதியில் நீர்பெருக்கம்
காலைமுதலிரண்டு நாள்வரையதிகமாக (வெ)

3 பவானியாறுதனில் பலத்தவெள்ள மென்றுசொன்ன
அவாவுடன் தனக்கு அந்தப்பெயர் வேண்டுமென்று (வெ)

4 சின்னாறுபெருக்கெடுத்தால் சீரேனோ எந்தனுக்கு
இன்னுவதும் பெருமை எனக்குத்தரவேண்டுமென்று (வெ)

5 சிலவூரழித்தவது சின்னாறுவென்றுசொல்லி
பலவூருநானழித்தேன் பாருமென்று திறமையென்று (வெ)

6 கல்நெஞ்சுடையபல கள்ளர்கூட்டத்திலொரு
புல்நெஞ்சுடையதனவான் கிடைத்தவாரெனவே (வெ)

7 குடகுமாநகரில்வெகு குருகலாமென்றுசொலும்
அடமெலாம்தீர்த்துக்கொள்வேன் ஆருங்காணவென்றுசொ [ல்லி

8 பெருக்கமெடுத்துரைக்க பேசவாய்கூடலையே
திருத்தமுடன்பலவூர் தேடித்தேடித்தானழித்து (வெ)

9 காவேரிபட்டியுடன் கல்வடங்குதனில்புகுந்து
காவாலுரைக்கமனம் நடுநடுங்குபாறுசெய்து (வெ)

10 பூலாப்பட்டிநகர் புகுந்தங்கவூர் பூரணமாய்
வேலைக்காகாதபடி வீடுகளைவீழ்த்திவாரி (வெ)

11 சாவேரிபுரமதிலே கனவேகமாய்நிறைந்து
ஓவென்றவாராழுது ஊலைவிட்டு நீக்குமாறு (வெ)

12 செருஞ்சிப்பேட்டை சாமியார்மடத்திலே நீர்புகுந்து
துரும்பாய்பலபொருள்கள் தூக்கிவேகமாகவேதான் (வெ)

13 அம்மாப்பேட்டைநகரும் அடுத்தநெடுங்குளநகரும்
சும்மாவிட்டோடிஜன துயர்க்கடலில் விழுந்தழுக (வெ)

14 சிங்கம்பேட்டைநகரில் தீவிரமாயுட்புகுந்து
அங்கம்துடித்திடவே அலைக்கையினல் கூரைத்தூக்கி (வெ)

15 காடப்பனூருடன் வெள்ளாளபாளையம் நுழைந்து
மாடமாளிகைகளெல்லாம் மடமடெனவீழ்த்திடவே (வெ)

16 கூத்தம்பட்டிவருத னள்ளியூர்களிலேகூர்மையுடன்
ஆர்த்துப்பலதுலைகள் தோட்டயோடுவீடுபோக (வெ)

17 புள்ளாக்கவுண்டம்பட்டி புளியம்பட்டிமுதலியவூர்
வெள்ளாமையுடன்பலவாய் வீடழித்துவேகமுடன் (வெ)

18 சின்னப்பநாய்க்கன் பாளையந்தனிலேதீவிரமாய்
என்னப்பாஎன்றழுவே யேகிபலவீடுவீழ்த்தி (வெ)

19 ஆடுடன்பாடுகளும் அநேகத்தட்டுப்போர்களையும்
வீடுடன் தானியமும் வேகமாகவாரிக்கொண்டு (வெ)

20 தொட்டிலுடன்பிள்ளைகளைத் தூக்கிக்கொண்டுமேடுதனில்
காட்டுக்கரடுகளில் கடுகிஜனம்போகச்செய்து (வெ)

21 ஆடுபோச்சுமாடுபோச்சு ஐய்யையோ வீடுபோச்சு
தேடும்பொருள்கள்போச்சு தெய்வமேகாவென்றழுக (வெ)

22 மனிதரழுகும்குரலோ மானமீதிலிடியொலியோ
புனிதக்கடலிரையோ போனபொருள்களென்றசத்தம் (வெ)

23 கோடானகோடிரூபாய் கொள்ளும்பொருளையெல்லாம்
ஓடிபெருநொடியில் ஊர்புகுந்தெடுத்துக்கொண்டு (வெ)

24 ஈசன் அருளிதுவோ எங்கள் தலைவிதியோ
மோசம்மோசம்நதியால் மூண்டுவந்த தூக்கமென்ன (வெ)

25 தந்திமேல்தந்திவர தாராளமாய்நீரும்வர
சிந்தைகலங்கியிரு கண்களிலுந்தாரைவர (வெ)

கும்மி.

பூரணச்சந்திரன் போலமுகத்தோழிர் பொருப்பின்மாமுலைப் பூவையரே
காரணங்கேள்நதி காவேரிதன்னிலே கணக்கில்லாவெள்ளம் வந்ததடி.
தொளாயிரத்தி யிருபத்திநாலாமாண்டு ஜூலையிருபத் தாரூந்தேதி,
பளாபளாயிது பார்த்ததில்லையென பரந்துவெள்ளமும் வந்ததடி.

வந்ததடிநீர் பெருக்கெடுத்து நல்லவாகான குமாரபாளையத்தில்
நொந்ததடிமச்சு மாடிவீடுகளை நுணுக்கிபூமியில் சாய்த்ததடி.
முன்னொருதடவை நீர்பெருகிவெகு முதல்கள் தானழித்திருந்தது [ல்லாம்
இன்னமும்நாலாறு நாளாகவில்லையே யென்றுசொல்வார் பெரியோர்களெ
சாய்த்தடிமண்ணில் தேய்த்ததடிமிக சாமர்த்தியங்களைச் செய்ததடி
எய்த்ததடிபணம் போட்டவர்நெஞ்சத்தை யெரியச்செய்தது எந்திழையே
எந்திழையேயினி சற்று கவனமாய் கேளடியான்றின் வலிமையெலாம்
காந்தியுடன் பலமாகவேகட்டிய கட்டிடம் பற்பல போனதடி
போனது ஆற்றோரம் பிள்ளையார்கோவில்கள் பூரணமாய் சிகாமுழுகி
யானதும்சாய்ந்தது காய்ந்தது நீர்பின்னு மண்டையில் பெண்பிள்ளை பாட
பெண்பிள்ளை பாடசாலைபோச்சு மிகப்பெரிய கட்டிடங்கள்போச்சு[சாலை
அண்டையில்கட்டிய கிராமச்சாவடி யடுத்தசத்திரமும்போச்சு,
போச்சுதடிசில வில்லைவீடுகளும்போச்சு பலகூரைவீடுகளும்
ஆச்சுதடியினியாற்றோர சங்கதியப்புரம் நேர்ந்ததைச் சொல்லுகிறேன்.
சொல்லுகிறேன்ரோட்டு செங்ககிரிப்பாதைமீதிலோதெனசொன்னவளை
வெல்லுகிறேனென வேகமுடன்வந்து விழுந்தரோட்டிலோடியேநீர்.
நீராய்நிறைந்து பழயசந்தைப்பேட்டை பக்கமாய்மிக்க பெருக்கமுடன்
நோய்புகுந்து பலவீடழித்துமே நேர்ந்ததுபோலீ ஸ்டேசன்வழியாய்.
வழியிலேபலர் வாழுகின்ற வில்லைவலுத்த வீடுகளையழித்து
ஒழியவேமனம் ஒடுங்கியவாழ ஓடுதடிமிக வேகமதாய்
வேகமதாய்பல சாமான்கள்வாரியே வேகமனமிகவீரிட்டழ
நோகவீடுபோன போனதென்றுபலர் நொந்தழுவாரடி கண்மணியே
கண்ணேமணியே கருவிளமேயிதைக் காட்டியுரைக்கில் மிகப்பெருகும்
உண்மையாயிதைத் தானிருத்தியினி யுரைப்பன் பாலத்தின் சேதிதனை
பாலத்தின்கண்கள் எல்லாம் மூடிஜலம் பாந்துவந்தது பாலத்தின்மேல்
சேலத்திலிருந்து வந்த கனம் துரையவர்கள்சீரான இஞ்சினியர்
இஞ்சினியரவர்களுடன் மாட்சிமை தங்கிய ஜில்லா கலெக்டர் துரை
வஞ்சியரே மோட்டார் வண்டியில்இரண்டு வள்ளல்களும்வந்து தானிரங்கி
இறங்கும் காலையில் சங்ககிரி கனம் சப்கலெக்டர்துரைதானிருந்து
வருமிறைவரை கூட்டியே வேகமாய் வந்தனர் பாலத்தருகினிலே
பாலத்தருகே வரும்போது கனம் தங்கிய தேவூர் ராஜா அவர்கள்
சேலம் செக்ககிரியரசர்களுக்கு சேர்ந்துவந்தனுபசாரம்செய்தார்
வந்தனுபசாரம் செய்தார்கள் பின்னும் வலுமையாகவே பாலத்தின்மேல்
சிந்தைவலுவுடன் முன்செலுமென்னலும் சேர்ந்துநடந்தந்த நால்வர்களும்

முழங்கால்தண்ணீரிலேநடந்தேநின்று முண்டாரிச்சுவற்றைத்தான்பிடித்து
அழும்புண்டா இதற்கென்றுசொல்லியதை யசைத்துபார்த்தனர்பக்குவமா
[ய்
பக்குவமாயிரு பக்கத்திலும்சென்று பார்த்துக்கடைசிவரையிலும்போய்
சொக்கிலுயர்ந்தவர் நால்வர்களும்நின்று சொகுசாய் பிடித்தனர்போட்டோ
போட்டோபிடித்தனர் நாலுதிசையிலும் பூரணமாயதுதீர்ந்தபின்பின்[வை
ஜோடியாய் நால்வருமேதிரும்பிவீரர் நிலைக்கு வந்ததைக்கேளடியே
கேளடிபற்பல மோட்டாரில் சில கிரீடந்தாங்கிய துரைகளெல்லாம்
நீளவேவந்துகண்ணால்பார்த்துநின்றுநீண்டமூக்கின்மேல்கையைவைப்பார்
கையைவைத்துநிற்குங் காலையிலேதண்ணீர் கடுகியேமிக வருகுதென்று
நையுமனதிற்கிடர்தரவேதந்தி நாடிமோட்டாரில் பறந்துவரும்
பறந்துவரும்பற்பல மோட்டார்பம் பாய்பட்டணம்போலக் கடைத்
[தெருவில்
திரிந்துவரும்பலர் நீர்பெருக்கைக்கண்டு திகைத்துக்கலங்குவரேந்திழையே
ஏந்திழையேயினி சற்று கவனமாய் என் மொழிதன்னையே கேளடிநீ
மாந்தர்பலர்மனைப்போச்சுபோச்சுதென்றுமண்மேல் மயங்கிவிழுந்தழுவார்
அழுவாருரை விட்டேபோவார் பலர் ஐயோசிவனேயென்றேதலைமேல்
விழுமோயிப்படி பேரிடியென்று விளம்பிகலங்கியே நின்றிடுவார்
சீலமிகுந்த ஆர். எஸ் பழனிசெட்டியார்சப் இன்ஸபெக்டரவர்களுமே
காலாகாலத்திலே ஜனங்கள்துயர் கண்டுகருத்துடன் துணையிருந்தார்
நின்றவர்செய்திகள் நிற்கவேஜலம் நீளப்பெருகி வருகுதென்று
சின்னப்பநாயக்கன்பாளையத்தைவென்று சீரிவருகிறதென்றுசொல்வார்
சொல்லுகின்ற சின்னப்பநாய்க்கன்பாளையம் தன்னில்வீடுகள்சேர்ந்துவிழ
செல்லுவோம்சீக்கிரம்ஊரைவிட்டென்றேகி சேர்ந்தகாடுகளிலேதவிப்பார்
தவிப்பாரிப்படி யன்னவர்குமர பாளையத்தார்கள் மிகவாடி
தவமெப்படியோ கோம்பில்நீர்வந்திடில் தான்பிழைப்பது வருத்தமென்று
என்று மனத்துள்ளே எண்ணமிட்டு சாமான் எடுத்துமூட்டைகள் கட்டிக்
[கொண்டு
அன்றுசென்றனர்காட்டூர்கத்தோரி தட்டாங்குட்டைசாமியம்பாளையத்தில்
பாளையம்போலப் பலரேகிநின்று பரதவிர்த்திடும் பார்மீது
வேளாணுகூலத்தை வெல்வதற்கு மாந்தர் விரும்பியென்செய்குவார்பாபம்
பாபபுண்ணிய விதியில்லையென்று சொல்லும்பாரியக்கல் மனக்காரர்களும்
ஓபகவசனேகார் எங்கள் தலைவிதி உள்ளதுமிப்படிதானேவென்பார்,
என்பாரிப்படி பற்பலவிதமாய் ஏங்கி ஜனங்கள் தவிர்த்துருகி
கண்பாரீசனே என்று பலதரம் கண்களில்நீர்வரக் கதறிடுவார்

கதரிமனம்போனபோக்குடனிப்படி காலம்கழித்துவருகையிலே
சிதரியகோபமடக்கிக் காவேரியும் சிறுகசிறுகநீர் குறைந்தனளே
நீர்குறைந்தவுடன் மூட்டைமுடிச்சுகள் சேருடன் வண்டியின்மேலேற்றி
பார்புகழ்குமாரபாளையத்தில்வந்து பழையபடி யிருந்தார்களடி,

நொண்டிச்சிந்து.

நூலிழை தணில்சிறுத்து மிகவும் நுணுங்கிய மெல்லிடைத் தோகையரே, சேல்விழி சேயிழையே செல்வே மிருவரும் பவானி நகர் பார்க்க, கோலமான பாலக்கடைசி யிதனை கூடிமனதில்மிக நாடியேபார், பள்ளம் மிகப்பெரிதாய் தண்ணீர் பாய்ந்துகுடைந்தபள்ளங்களைப்பார்க்க, உள்ளம் நடுங்குதடி மிக உறுத்துது கால்களை நடப்பதற்கு, ஆனாலும் மெதுவாய் யிறங்கி யப்புறம் சென்றுசுற்றிக் கண்டிடலாம், கையைப்பிடித்திறங்கி காண்பாய் கடைசி பாலச்சுவர் வீழ்ந்ததனை இரும்போயிது செங்கல்லோ இதனை எடுத்துப்பார்த்துவிட்டு என்பின்னல்வா, துரும்பாச்சுடு மாளிகை சிறுதுண்டு துண்டுகளாக பொடிந்தபேங்கு அர்பன் இரும்புப்பெட்டி, மட்டிலும் அசையாதிருப்பதைக்காணடிநீ பேர்பெற்றதுபழய பெண்கள் பாடசாலையதுயெங்குபோச்சு, அதற்கெதிரிருந்த மச்சு, மாடிவீடுபோன திறம் பாரடியே, பாரடி இந்தப்பக்கம் வீடுகள் பாழாகிக்கிடப்பதைக் கண்டதினால், வெந்ததுஎந்தன்மனம். இனி, வேகமாகச்சென்று கண்டிடலாம், சிந்தைகரையுதடி இந்த சிங்காரரீடிங்கு ரூம்போனதைப்பார் பத்திரம் மெதுவாய்வா அந்த பத்திரம் அர்த்தனாரிசாமி செட்டியார் மித்தைதவிர மற்ற, கட்டிடம் எல்லாம் விழுந்ததைப்பாரடியே, கந்தைகிழிந்ததைப்போல் பலமனைப்பாழாகிகிடப்பதைப்பாரடிநீ சிந்தைகரைந்துருகும் இந்ததிருமலசாமி நாய்க்கர்மாடிவீடு, நொந்துவிழுந்ததடி, பார்பார்நோக்கமாகப் பள்ளிக்கூடமதை, கம்பவுண்டு சுவர்களெல்லாம், காணோம் கடுகிநடந்தினிவா கால் மெதுவாய், வைத்துசீக்கிரம்வாடி இந்த வகைரா கடைத்தெருவில் பலமனைகள் இருந்தும் இல்லாததுமாய் நின்று, ஏங்கித்தவிப்பதைப்பார் எந்திழையே, இந்தரோட்டுகளிலெல்லாம் பள்ளங்கள் பாரியகிணறுகள்போலாச்சு, எப்படி வண்டிகள் நடக்கும், இனி எத்தனை மாதமாகும் சுத்தமாக பித்தம்பிடித்ததைப்போல், மனம்பிதற்றி பேயனைப்போல் மிகவாடுதுள்ளம், இத்தனை யித்தெருவில், போதும் இனிநடப்போம் தேர்வீதியிலே சித்தங்கலங்குதடி இந்த சீர்கேட்டை காண்பதற்குச்சேயிழையே, யித்தனை வீடுகளும், இடிந்துவிழுந்து கிடப்பதைநீ காணடியே, மொத்தாயிந்த

சயிட்டில் மூன்று, நான்குவீடுகள் மட்டுமிச்சமிருக்கு, மைத்தவை மண்ணு ச்சு, இந்த மண்பிறந்ததுமுதல் இப்படிக்கஷ்டம், வந்திராதென்று சொல் வேன், இப்போ மாயமாகத்தண்ணீர் பெருக்கெடுத்து, எப்படி வந்தது வோ, ஈசாவதுந்தெரியலேயே சீயமரும், தேரும்நிலைகுலைந்து, குனிந்து விட்டனவெனில்பல விளம்புவதேன், உத்தமியானவளே பாராய் ஒருமரக் கடையிங்கே யிருந்ததிதில், எத்தனை மரம்போச்சோ அறியேன் இதைப் பார் கண்ணின்மணியானவளே, தாசிகறுப்பாயி கரைந்தழுக கட்டிடச்சு வர் நீளவிழுந்ததனை யோசி மற்றுமித்தேரு மனதில், யூகமாகக்காண்பா யொழிந்ததெலாம், சரிசரிநேரமாச்சு யினி சற்றுமிருக்கமுடியாதெனினும் ஒருவாருரைத்திடுவேன்கேளாய் ஓவென்றழுகுரலையொண்டோடியேநாவா லுரைக்கமுடியா அந்த நாராயணன் தான்கதி யிவர்களுக்கு, பரமன்துணை யிருந்து இந்த பரிதாபகாமதைத் தவிர்த்திடநாம் திறமாய்த் துதித்திடு வோம் வாடி சிங்காரமானசிலை நுதலாளே. (தந்தினம்தினதனனு)

பேசவாய்க்கோடிவேணுமே என்ற மெட்டு.

பல்லவி.

பரிதாபமென்னென்றுரைப்பேன் நதியில்போன
பலவான் பொருள்களுரைப்பேன் (பரி)

அநுபல்லவி.

அரியதான பலமரங்களும்விலங்கும் அடித்துக்கொண்டுச்செல்லும்
பொருள்மிகக் கலங்கும். (பரி)

சரணம்.

பருவதநிகர்கரி பலபலபன்றி பலத்த புலிகரடி பாம்புகளன்றி
சிருநரியாடுகள்மாடு சிறுத்தையுடன் செங்காய்குரங்கெருமை
முதலிய பலசெலும். (பரி)

தருவிலுயர் சந்தனங்குங்குமந் தாழைதாரம்பை பலா மாமரம்
வேம்பு
உருவிலுயர்ந்தபனை தெங்குடன்தேக்கும் உருதியானபல
பீம்சுகள் போக்கின் (பரி)

கம்புகேழ்வாகு கோதிநெல் சாமை கரும்புமஞ்சள் தட்டைக்கொ
ட்டைக்கடுகுளுந்து. நம்புமரிசி பயிருடன்பல தான்யம் நாடுதர்க்
கரியபல் கூரைவீடுகள் செலும்.

எழைகள் படுந்துயரத்தை யியம்பலாமே யிவர்கள்படும்
கூழின்கஷ்டமென்ன சொல்லுவேன் குடி வீடுபோச்சுது
வாசல்போச்சுது வேகமாய் நெய்யுந்தறிகள் போச்சுது வேறுகதி
யில்லையேயீசா எனத்தலைமேல் கைகளை வைத்து எங்கியழுதாரை
விடுவார்.

காவேரிவெள்ளத்தினால் மாந்தர்பட்ட துயரம் கெட்டபொருள்கள்
நாவினாலுரைக்க வசமோ தன மேவினோர் கன மானியேநிகர்
தாவியபொருள் போனசேதியை சற்றுரை யர்த்தநாரிசாமி
பிழைபொருத்தே பேணுவாருள்ளம் பெரியவரென்பதுமெளிதே

குமாரபாளையத்தார் சாமான்களை வண்டியில் ஏற்றிசென்றது.

மஞ்சுநிகர் குந்தள என்றமெட்டு.

இலக்ஷகணக்கான ஜவுளி களையேமூட்டை களாககட்டி
    ஏற்றுவார்கள் வண்டிமீதிலே
கித்தெரிசமாமியம் பாளையத்துடன் செங்ககிரி சேலம் காட்டூரு
    சேர்ந்துகடை வீடுகள்வாங்கி
வாடகைதந்து மனந்தளர்ந்து சோர்ந்திருந்து வாடிநிற்குறார்
    கம்புகேழ்வரகு நெல்சாமை கற்கண்டு மஞ்சள்
    கடுகுளுந்து கட்டி மூட்டை வண்டியேற்றியே.
கணவேகமாய் மனநோகவே செலுத்தாகமாய்த்தண்ணீரிலாமலே
    தயங்கியுள்ளம் வாடிநின்றார்கள்
வயிறெரிந்து துயரால்நொந்து கடுகிநடப்பார்கள் மெலிந்து
    இப்படி பலபல சாமான் இயன்றவரை எடுத்துக்கட்டி
எதுந்தெரியாமல் மயங்கி
    இனி விரைவிலேகுவோம் வருகுவீரென கருகியேமனம்
உருகியேசென்று
    காட்டுக்கொட்டாய்களிலுமேதங்கி மதிமயங்கி மாதவமிது
வோ யென்றேங்கி.

வாழிநீர் நிலம் வாழிய வாழிபூ
வாழி வள்ளல்கள் வாழிய வந்தணர்
வாழி யிக்கதை வாசித்தவர் மறை
வாழி வாகுடன் கேட்டவர் வாழியே.

முற்றிற்று.

☞ இப்புஸ்தகம் வேண்டும் வியாபாரிகள் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதினால் முதல் இரண்டாவது பாக புஸ்தகங்கள் கிடைக்கும்.

M. பழனிசாமி செட்டி, கொமாரபாளையம்-பவானி.